செ.வெ.எண்: 606/2016 நாள்: 07.09.2016

# கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவிப்பு

கேரளா / தமிழ்நாடு மாநில எல்கை முதல் கன்னியாகுமரி வரை (NH-47) மற்றும் நாகர்கோவில் முதல் காவல்கிணறு வரை (NH-47B) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலம் புதிய நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

**தொகுப்பு-I கேரளா / தமிழ்நாடு எல்கை முதல் வில்லுக்குறி வரை**

முந்தைய நில எடுப்புச் சட்டப்படி நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட கிராமங்கள்:

1. குன்னத்தூர்
2. கப்பியறை
3. கல்குளம்

புதிய நில எடுப்புச் சட்டம் எண். 30/2013ன்படி நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட கிராமங்கள்:

1. மெதுகும்மல்
2. குளப்புறம்
3. வாள்வச்சகோஷ்டம்
4. திருவிதாங்கோடு
5. இரணியல்

**தொகுப்பு-II வில்லுக்குறி முதல் கன்னியாகுமரி வரை**

முந்தைய நில எடுப்புச் சட்டப்படி நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட கிராமங்கள்:

1. ஆளூர்
2. திருப்பதிசாரம்
3. தேரூர்
4. இரவிப்புதூர்
5. குலசேகரபுரம்
6. தாமரைக்குளம்
7. கொட்டாரம்

புதிய நில எடுப்புச் சட்டம் எண். 30/2013ன்படி நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட கிராமங்கள்:

1. வில்லுக்குறி
2. வடசேரி

**நாகர்கோவில் முதல் காவல்கிணறு வரை**

முந்தைய நில எடுப்புச் சட்டப்படி நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட கிராமங்கள்:

1. திருப்பதிசாரம்
2. தேரூர்
3. தோவாளை
4. ஆரல்வாய்மொழி

புதிய நில எடுப்புச் சட்டம் எண். 30/2013ன்படி நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட கிராமங்கள்:

1. நாகர்கோவில்

நில எடுப்பு செய்யப்பட்டுள்ள நிலங்களுக்கு நாகர்கோவிலில் உள்ள தனி மாவட்ட வருவாய் அதிகாரி மூலம் நில எடுப்புச் சட்டப்படி இழப்பீடு தொகை வழங்கப்பட்டுள்ளது. இழப்பீடு தொகை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் இந்தப் பணிக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள விளவங்கோடு, நாகர்கோவில் மற்றும் வள்ளியூரிலுள்ள தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து இழப்பீது தொகையை பெற்றுக் கொள்ளும்படி நில உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தனி மாவட்ட வருவாய் அதிகாரி வழங்கிய இழப்பீடு தொகைக்கு கூடுதலாக தொகை வழங்க கேட்பவர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மனுச்செய்து கூடுதல் இழப்பீடு தொகை பெற்றுக் கொள்ளலாம் என்பதை தெரிவிக்கப்படுகிறது.

புதிய நான்கு வழிச்சாலை இரண்டு ஆண்டிற்குள் முடிக்கப்பட வேண்டியதாக இருப்பதால் நிலம் வழங்கிய உரிமையாளர்கள் ஒத்துழைப்பு நல்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஓம்/- சஜ்ஜன்சிங் ரா.சவான்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

//உண்மை நகல் // உத்தரவுப்படி //

மாவட்ட ஆட்சியருக்காக,
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர்(நிலம்),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.